

கலைஞர் 100
1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 32 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆவணி 26 – வியாழக்கிழமை 11 செப்டம்பர் 2025 – வெளியூர் 16 + 12 பக்கங்கள்

Established : 10.8.1942 - Volume : 84 - Issue 32 : Thiruvalluvar Year - 2056 - Aavani 26 - Thursday 11 September 2025 - Dak 16+12 Pages ₹ 5.00


### ஓசூர் – கிருஷ்ணகிரியில் ‘ரோடு ஷோ!’ – இன்று

# ஓசூரில் முதலீட்டாளர்கள் மாநாடு! முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கிறார்!

## கிருஷ்ணகிரியில் முடிவுற்ற திட்டப்பணிகளைத் திறந்தும்; புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் முதல்வர் நல உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்!

**ஓசூர், செப். 11 -**

**கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு இரண்டு நாள் பயணம் மேற்கொள்ளும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஓசூரில் இன்று நடை பெறும் முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார். தொடர்ந்து ஓசூர், கிருஷ்ணகிரியில் நடை பெறும் ‘ரோடு ஷோ’வில் பொதுமக்களின் அன்பான வரவேற்பை ஏற்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நாளை கிருஷ்ண கிரியில் நடைபெறும் அரசு விழாவில் முடி வுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், பொதுமக்களுக்கு நல உதவிகளை வழங்கியும் முதல்வர் அவர்கள் பேருரை யாற்றுகிறார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர் கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக இன்று (11.09.2025 - வியாழக்கிழமை) கிருஷ்ணகிரி மாவட்டத் திற்கு வருகை தருகிறார்.

காலை 11 மணிக்கு சென்னையில் இருந்து விமானம் மூலம் ஓசூர் பேள கொண்டப்பள்ளியில் உள்ள தனேஜா விமான ஓடு தளத்தை வந்தடைகிறார். அங்கு அவருக்கு கட்சி நிர்வாகிகள் வர வேற்பு அளிக்கிறார்கள். தொடர்ந்து ஓசூ ரில் தளி சாலையில் உள்ள ஆனந்த் கிராண்ட் பேலஸ் சென்றடைகிறார். அங்கு 11.30 மணிக்கு நடைபெறக் கூடிய தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொள்கிறார்.

தமிழ்நாடு அரசு ஏற்கனவே தூத்துக்குடி மாவட்டத்தை மையமாக கொண்டு ஒரு முதலீட்டாளர் மாநாட்டை நடத்தியது. இதன் அடுத்த கட்டமாக ஓசூரை மையமாக கொண்டு இன்றைய தினம் முதலீட்டாளர் மாநாடு நடைபெற இருக்கிறது. இந்த முதலீட்டாளர்கள் மாநாட்டில் 40 முதலீட்டு ஒப்பந்தங்கள் கையெழுத்தாக இருப்பதாக தமிழ்நாடு தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா தெரிவித்திருக்கிறார். பின்னர் அங் கிருந்து 12.50 மணிக்கு எல்காட் தொழில் நுட்பப் பூங்காவிற்கு செல்கிறார். அங்கு அமைய உள்ள நிறுவனத்திற்கு அடிக்கல் நாட்டுகிறார். ஓசூரில் ரோடு ஷோவில் பங் கேற்கிறார். மாலை 4.30 மணி அளவில் சூளகிரி பஸ் நிலையத்தை அடைகிறார். அங்கு பஸ் நிலையம் முதல் தேசிய நெடுஞ்சாலை வரை ரோடு ஷோவில் பங் கேற்கிறார்.

அங்கிருந்து புறப்பட்டு குருபரப்பள்ளி டெல்டா நிறுவனத்தை வந்தடைகிறார். அங்கு 5 மணிக்கு புதிய தொழிற்சாலை தொடங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்.

**கிருஷ்ணகிரியில் ‘ரோடு ஷோ’வில் பங்கேற்கிறார்!**

மாலை 6 மணிக்கு கிருஷ்ணகிரியை வந்தடைகிறார். அங்கு சுங்கச்சாவடி அரு கில் கட்சியினர் முதலமைச்சருக்கு வர வேற்பு அளிக்கிறார்கள். தொடர்ந்து ரோடு ஷோவில் பங்கேற்று பொதுமக்களின் அன்பான வரவேற்பை ஏற்கிறார்.

**12.09.2025**

நாளை (12.09.2025 - வெள்ளிக் கிழமை) காலை 10.15 மணிக்கு கிருஷ் ணகிரி அரசு ஆடவர் கலைக்கல்லூரியில் நடைபெறும் அரசு விழாவில் முதலமைச் சர் அவர்கள் பங்கேற்கிறார். அங்கு காவல் துறையினரின் அணிவகுப்பு மரியா தையை ஏற்றுக் கொள்ளும் முதல்வர் அவர்கள், விழா மேடை அருகில் அமைக் கப்பட்டுள்ள சிறப்பு கண்காட்சி அரங்கு களை பார்வையிடுகிறார்.

**மாற்றுத் திறனாளிகளுக்கு நலஉதவிகள் வழங்குகிறார்!**

பின்னர் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை முதல்வர் அவர் கள் வழங்கி அவர்களுடன் கலந்துரையா டுகிறார். தொடர்ந்து விழா மேடைக்கு வரும் முதலமைச்சர், கல்லில் உறைந்த வரலாறு கிருஷ்ணகிரியின் தொன்மை யும் வரலாறும் என்ற தலைப்பில் உரு வாக்கப்பட்ட புத்தகத்தை வெளியிடுகிறார். பின்னர் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக் கல் நாட்டியும், முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைக்கிறார். தொடர்ந்து கிருஷ்ண கிரி மாவட்டத்தின் திட்டப்பணிகள் குறித்த குறும்படத்தை திரையிடுதல் நிகழ்ச்சி நடைபெறுகின்றது. இதனைத் தொடர்ந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விழா பேருரையாற்றி, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி விழா வில் சிறப்புரையாற்றுகிறார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (10.9.2025) சென்னை, எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் நடைபெற்ற “காவலர் நாள் விழா – 2025” இல், காவலர் நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில், காவல் துறை தலைமை இயக்குநர் (பொறுப்பு) க. வெங்கடராமன், சென்னை மாநகர காவல் ஆணையர் ஆ. அருண் உள்ளிட்ட காவல்துறை உயர் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# “காவலர் நாள் விழா - 2025” உறுதிமொழி ஏற்பு!

### சென்னை, ராஜரத்தினம் மைதானத்தில் நடைபெற்றது!

**சென்னை, செப். 11 -**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை யில் “காவலர் நாள் விழா - 2025” உறுதிமொழி ஏற்கப்பட்டது.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலை மையில் நேற்று (10.9.2025) சென்னை, எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் நடைபெற்ற “காவ லர் நாள் விழா 2025”ல், காவலர் நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது.

முதலமைச்சர் அவர்கள் 29.4.2025 அன்று நடைபெற்ற 2025-2026 பட்ஜெட் கூட்டத் தொடரில், “முதன் முதலாக 1859 ஆம் ஆண்டில் மெட்ராஸ் மாவட்ட காவல் சட்டத்தை நிறைவேற்றி, நவீன மற்றும் அமைப்புரீதியான காவல்துறை தோற்றுவிக்கப்பட்ட செப்டம்பர் 6ஆம் நாள் இனி ஆண் டுதோறும் காவலர் நாளாகக் கொண்டாடப்படும்” என்று அறிவித் தார்.

அதன்படி, முதல் காவலர் நாள் கொண்டாட்டங்களைக் குறிக்கும் வகையில், அனைத்து காவல் நிலையங்களிலும் உறுதிமொழி ஏற்பு, இன்னுயிர் நீத்த காவல்துறை யினருக்கு அஞ்சலி செலுத்துதல், காவல்துறையின் செயல்பாடுகளை பொதுமக்களிடம் கொண்டு செல் வது, காவல் குடும்பங்கள் மற்றும் சமூகத்தை உள்ளடக்கிய கலாச்சார நிகழ்வுகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் மாவட்டங்கள் மற்றும் நகரங்களில் நடைபெற்றன.

அதனைத் தொடர்ந்து, தமிழ் நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று சென்னை, எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் நடைபெற்ற “காவலர் நாள் விழா 2025”ல், காவலர் நாள் உறுதிமொழி ஏற்கப் பட்டது.

**காவலர் நாள் உறுதிமொழி**

**“இந்திய அரசியலமைப்பின் பாலும், தமிழ்நாடு காவல் துறை யின், உயரிய நோக்கங்களின் பாலும், நான் உண்மையான ஈடு பாடும், உளமார்ந்த பற்றும் கொண் டிருப்பேன் என்று, மனமார உறுதி கூறுகிறேன்.**

**எந்தவித அச்சமோ, விருப்பு வெறுப்போ இன்றி, அனைத்துத் தரப்பு மக்களுக்கும், நியாய உணர் வுடன் என் கடமைகளை நிறை வேற்றுவேன் என்றும் உறுதி யளிக்கிறேன்.”**

மேலும், காவலர் நாள் விழாவை முன்னிட்டு நடைபெற்ற போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற காவலர் குடும்பங்க ளைச் சார்ந்த மாணவ, மாணவி யர்களுக்கு முதல்வர் அவர்கள் பரிசுகளை வழங்கி, சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில், காவல் துறை தலைமை இயக்குநர் (பொறுப்பு) க. வெங்கடராமன், சென்னை மாநகர காவல் ஆணையர் ஆ. அருண், உள்ளிட்ட காவல்துறை உயர் அலு வலர்கள் மற்றும் அரசு உயர் அலு வலர்கள் கலந்து கொண்டனர்.

### மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க, கால நிர்ணயம் செய்த விவகாரம்:

# குடியரசுத் தலைவரின் கேள்விகளை நிராகரிக்க வேண்டும்!

### உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வலியுறுத்தல்!

*புதுடெல்லி, செப். 11 -*

மசோதாக்களுக்கு கால நிர்ணயம் செய்த தீர்ப்புக்கு எதிராக குடியரசு தலைவர் மூலம் ஒன்றிய அரசு கேள்வி எழுப்பிய வழக்கு உச்சநீதி மன்றத்தில் நேற்று விசார ணைக்கு வந்தது. இதில் தமிழ்நாடு அரசு தரப்பில் மூத்த வழக்கறிஞர் வில்சன் ஆஜராகி வாதிட்டார். ஆளு நர் வழக்கில் உச்சநீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பை தமிழ் நாடு மட்டுமல்ல; பல மாநி லங்கள் கொண்டாடுகின் றன என்றும் அதற்கு பாதிப்பு ஏற்படக்கூடாது என்றும் தெரிவித்தார்.

மேலும், ஆளுநர், மாநில அமைச்சரவை பரிந்துரைப் படிதான் செயல்படமுடி யும் என்றும், இதனை அரசி யல் சாசன பிரிவு 200, 201 தெளிவாக வரையறுத்துள்ள தாகவும் வில்சன் குறிப்பிட்டார்.

ஆளுநர் மசோதாக் களுக்கு ஒப்புதல் வழங்குவ தில் கால நிர்ணயம் செய் வது அவசியமானது என்றும், தமிழ்நாடு வழக்கை பொறுத்தவரை யில் 2023ம் ஆண்டு மனுதாக் கல் செய்யப்பட்டு 2025ம் ஆண்டுதான் தீர்ப்பு கிடைத் ததாகவும், 2 ஆண்டுகள் நீதி மன்றத்துக்கு அலைந்து கொண்டிருந்ததாகவும் வில்சன் தெரிவித்தார்.



குடியரசுத்தலைவர் எழுப்பிய கேள்விகளுக்கு ஆளுநர் வழக்கு தீர்ப்பி லேயே பதில்கள் உள்ளதாக வும், எனவே குடியரசுத் தலைவர் கேள்விகளை நிரா கரிக்க வேண்டும் என்றும் வில்சன் வாதிட்டார்.

இதனைத் தொடர்ந்து, குடியரசுத்தலைவர் கேள்வி களுக்கு 109 பக்கங்கள் அடங்கிய தமிழ்நாடு அர சின் விரிவான எழுத்து மூல மான வாதங்களையும் வழக் கறிஞர் வில்சன் தாக்கல் செய்தார். தொடர்ந்து வாதிட்ட மற்ற மாநில வழக் கறிஞர்கள், கால நிர்ணயம் இல்லாத பல பிரச்சினை களில் உச்சநீதிமன்றம் கால நிர்ணயம் செய்துள்ளதாக வும், சபாநாயகர் முடிவு எடுப்பது குறித்தும், தேர்தல் ஆணையர் நியமனம் தொடர்பாகவும் கால நிர்ண யம் செய்து தீர்ப்பு வழங்கப் பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

# தமிழகம், புதுச்சேரியில் கனமழை!

*சென்னை, செப். 11 -*

சென்னை வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்; “தென்னிந் திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது என்று தெரிவித்ததோடு,.

தமிழகத்தில் இன்று (11.9. 2025) ஒருசில இடங்களி லும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இடி, மின்னலுடன் கூடிய பலத்த காற்று மணிக்கு 30 முதல் 40 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.

செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புது வையிலும் கன மழை பெய்ய வாய்ப்புள்ளது.

12.9.2025 தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய் யக்கூடும். இடி, மின்னலு டன் கூடிய பலத்த காற்று மணிக்கு 30 முதல் 40 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.

13.9.2025 முதல் 16.9.2025 வரை: தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற் றும் காரைக்கால் பகுதிகளி லும் லேசானது முதல் மித மான மழை பெய்யக்கூடும் என்று தெரிவித்துள்ளது.

சென்னை மற்றும் புறந கர் பகுதிகளுக்கான வானிலை முன்னறிவிப்பு:

இன்று (11.9.2025): வானம் ஓரளவு மேகமூட் டத்துடன் காணப்படும். நக ரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான / மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதி கபட்ச வெப்பநிலை 35” செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 28” செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

தென்தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளை குடா மற்றும் அதனை ஒட் டிய குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையி டையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித் துள்ளது.